# TIRUPATTUR MUNICIPAL WATER SUPPLY BYE-LAWS

## திருப்பத்தூர் நகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகள்

### 1920ம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் படி செய்யப்படும் அறிவிப்பு

நகராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 130, 131(1), (2), (3), 132(1), 132எ, 134, 135, 306, 308 மற்றும் 309 பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்.

By Laws formed under section 130, 131(1) (2) (3), 132(10, 132(A), 134, 135, 306, 308 and 309 of Tamil Nadu District Municipalities Act 1920 (Revised) for regularizing grant and control of House service connections and other types of connection.

நகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் உபயோக அளவை கணக்கிடவும், குடிநீர் குழாய் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம் பெறுகின்றன.

New water supply House Service connection granted, transfer, extension, alterations, repairs and also proper maintenance in accordance with this bye-law framed. Provisions were made under this act, to avoid protected water supply wastage, measuring the quantity of supply of water, fixing water meters, providing water supply tanks in Houses and fire hydrants etc.,

1. குடிநீர் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின சட்டத்துணை விதிகள் 131ல் (1) வது பகுதி (அ) 132வது விதிகள் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து, பதிவு கட்டணம் ரூ.100/-. (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி விண்ணப்பம் வழங்கப்படும். மேலும், குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டு கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும்.

Application for the House Service Connection under sub section 1(A) of section 131, section 132 of the Tamil Nadu District Municipalities Act (Revised) 1920, as amended should be individually submitted by the owner of the premises by himself or through an authorized representative in the form "A" with the Registration fee of Rs.100/- along with estimate to be submitted to the Municipal Commissioner. Based on the seniority of making the payment of registration charges, a list will be maintained upon the date of registration fees paid in the Municipal Office. Further after remitting the prescribed amount towards estimate charges and after obtaining the permission from the Municipality, the connection works should be commenced.

(அ) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டில் 20 சதவிகிதம் சென்டேஜ் கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்த அளவு ரூ.750/– வசூலிக்கப்படும்.

(ஆ) குடிநீர் திட்டத்தில் அரசு கட்டிடஙகளுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணஙகள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியதில்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

(இ) மேற்கண்ட கட்டணஙகளில் வைப்புத் தொகை தவிர இதர கட்டணஙகள் எதுவும் திருப்பித்தரப் படமாட்டாது. செலுத்திய தொகைக்கு வட்டி எதும் வழஙகப்படமாட்டாது.

2. குடியிருப்பு உபயோகத்திற்கோ மறறும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கோ வழஙகப்படும் இணைப்புகளுக்கு அளவு மானிகள் பொருத்தப்பட்டு சதுர அடி முறையில் கட்டணஙகள வசூல் செயயப்படும். ஏற்கனவே அளவு மானி பொருத்தப்படாமல் டேப்ரேட் விகிதத்தில் உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

3. வழஙகப்படும் குடிநீர் வீட்டு உபயோக காரியஙகளுக்கானதாக அல்லது வீட்டு காரியஙகளுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 131வது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரைகளின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

4. (அ) ஒரே இணைப்பின் வாயிலாக வீட்டு உபயோக பயன்களுக்கும் அவையல்லாத பிற பயன்களுக்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகம் அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஆ) ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனஙகளுக்கு கொடுக்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கும் கட்டிடஙகளின பரப்பளவுக்கேற்ப குறிப்பிட்டுள்ள விலை விகிதஙகளின வைப்புத்தொகை மற்றும் கட்டணஙகள வசூல் செய்யப்படும். மேற்படி நிறுவனஙகள் பயன்படுத்தும் குடிநீருக்கான காரியஙகளை பொறுத்து வீட்டு உபயோக பயன் மற்றும் அவையல்லாத பிற

1A. New Service Connection estimate charges will include a centage of 20% on the net value of the estimate. Supervision charges subject to a minimum of Rs. 750/- only.

B. In case of effecting New House Service Connection to Government buildings the value of the estimate supervision charges calculated shall not be payable in advance to the Executive Authority.

C. The charges levied for giving connection except the deposit will not be refunded on any account and no interest will be paid for the said deposit amount.

2. The supply of water for domestic and Non-domestic House service connections shall be given based on the building square feet basis. The existing tap rate system if any (without fixing metre) should be converted into meter system. After issuing a notice within 60 days. Otherwise this house service connections will be disconnected without any further intimation.

3. Any dispute regarding the type of usage whether for residential or non residential purpose would be decided based on the section 131 of Tamil Nadu District Municipalities Act 1920 and the explanation there of.

4. A) Drinking water used for Both domestic and Non-domestic purpose water supply through a House service connection is utilized, the water charges shall be levied at the non-domestic rates.

4.B) Even in the case of buildings owned by the Municipality, such water connections will have only meter reading devices but also appropriate rates of chargers will be collected depending upon

பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

the domestic or non-domestic use of water by such establishments.

(இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை கட்டும் போதோ அல்லது பழுதுகள் பார்க்கும்போதோ நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டது ஆணையர் கண்டுபிடித்தால குடியிருப்பு அல்லாத உபயோகமாக கருதப்பட்டு அதன வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4.C) No connection will be given to the premise to which is not levied property tax. If an existing domestic House service connection is in the building which the same will be reconstructed or modified or major repairs and if protected water supply be utilized this connection will be taken into account as on nondomestic purposes and the rate of charges will be collected accordingly.

4 (ஏ). தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால ஒப்புதல அளிக்கக்கூடிய வரைமுறைகளுடன நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

4. D) The Municipal council may sanction new water supply connection to other local bodies or others with in or outer Municipal limit with the prior approval of Chief Engineer, Office of the Commissioner of Municipal Administration, Chennai within the norms prescribed.

5. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும்தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பை கட்டுப்படுத்த நீர்வரத்து கட்டுப்பாட்டு மானி (Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப் படவிருக்கும் பயன் இணைப்புகளில் இருந்தோ குடிநீர் வழங்கப்படமாட்டாது.

5. A) New House Service connection to the individual taxed house shall be given by means of a single pipe from the D-System through a ferrule and a flow control valve. Water shall not be supplied from another house or building already assessed separately and no connection shall be given from the Existing Connection or a connection proposed to be given for any other premises. The ward house shall mean a building standing alone or multiple building that has been assessed under a single assessment for property tax.

விளக்கவுரை :
இத்துணை விதிகளில் இடம் பெறும் "வீடு" எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

**Explanation** : The word "House" as per this bye law means one portion of the building of Buildings or single assessment of property tax.

ஆ. அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான இணைப்பு

New House Service connections for multi-stored apartments.

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்பு மட்டும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 1 எண் |
| 2. | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 2 எண்கள் |
| 3. | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 3 எண்கள் |
| 4. | 13 முதல் 16 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 4 எண்கள் |
| 5. | 17 முதல் 20 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 5 எண்கள் |
| 6. | 21 முதல் 40 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 6 எண்கள் |
| 7. | 41 முதல் 70 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 7 எண்கள் |
| 8. | 70 குடியிருப்பு-களுக்கு மேல | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 8 எண்கள் |

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

6. இந்து கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே, அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.

For multi-storied apartment buildings connection given shall be of proper size depending upon the no. of dwellings as follows :-

| | | | |
|---|---|---|---|
| 1. | For 4 Flats | 20 mm pipe 15 mm ferrule | 1 No. |
| 2. | 5 to 8 Flats | 20 mm pipe 15 mm ferrule | 2 Nos. |
| 3. | 9 to 12 Flats | 20 mm pipe 15 mm ferrule | 3 Nos. |
| 4. | 13 to 16 Flats | 20 mm pipe 15 mm ferrule | 4 Nos. |
| 5. | 17 to 20 Flats | 20 mm pipe 15 mm ferrule | 5 Nos. |
| 6. | 21 to 40 Flats | 20 mm pipe 15 mm ferrule | 6 Nos. |
| 7. | 41 to 70 Flats | 20 mm pipe 15 mm ferrule | 7 Nos. |
| 8. | Above 70 Flats | 20 mm pipe 15 mm ferrule | 8 Nos. |

A separate property assessment should be levied for each flat and separate estimate amount should be remitted. But a separate property tax assessment should be attained for each flat of the building.

6. The supply of potable water to mosques, temples and churches shall be only for drinking purposes. Such supply shall be regularized and

(அ) வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பு விதிகள் இதற்கும் பொருந்தும்.

considered as follows :

a) For big temples, Mosques, Churches etc., the water supply shall strictly be for drinking purpose only and the bye laws will be applicable to Domestic tariff.

7. இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் அளவு, அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்கு தக்கபடி கீழ்கண்டவாறு நிர்ணய அளவுகள் அமைக்கப்படும்.

7. For residential all the pipe shall be as per the table below or as per the pipes approved by the Chief Engineer O/o Commissionerate of Municipal Administration and shall not on any account be more than 15mm.

(1) 15 எம்.எம். குழாய் இணைப்பு –10 எம்.எம். திருகு குறுங்குழாய் (30 மீட்டர் நீளம் வரை)

i) Up to 30m, 15 mm pipe connection with 10 mm ferrule.

(2) 20 எம்.எம். குழாய் இணைப்பு – 15 எம்.எம். திருகு குறுங்குழாய் (90 மீட்டர் நீளம் வரை)

ii) Up to 90m, 20 mm pipe connection with 15 mm ferrule.

மேற்கண்ட இனங்கள தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்ய தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். அனைத்து இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் (Flow Control Valve) மற்றும் இதர உபகரணங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப் பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய குழாயின் விட்டம் 15 மி.மீ. அளவிற்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய நிர்ணய நிறுவனத்தின் தரத்தின் குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

In case any other measurement is found necessary only after getting the permission of the Chief Engineer Office of the Commissioner of Municipal Administration, the connections will be given. The flow control valves pipes to be used in all cases should be tested and bear ISI Certificate.

8. குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக் குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை, அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

If the distance between the Disribution mains and the House Service connection exceeds 90m, then the connection shall be effected only after the approval obtained from the Chief Engineer, Commissionerate of Municipal Administration.

9. (அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் பார்வையிட வசதி செய்து தரவேண்டும். அவ்வாறு பார்வையிட தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாது என்று

9 (a). New HSC connection laid to the residential premises shall be easily visible for inspection by the Municipal staff. The owner of the premises or the occupiers shall facilitate to inspect the connection by the Municipal staff. If in any place,

கருதி குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

the inspection is not possible due to the willful act of restrained by the owner or the occupier by any means, the said connection will be disconnected considering as unlawful connection.

(ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிந்தும் தண்ணீரை மற்றும் வீணாகும் குடிநீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

b) The water tap shall not be kept in such a manner to be immersed in water. The water running out from the pipe shall be properly routed by a system to reach the nearest Municipal drain or sewer.

10.(அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகை தாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். பொருத்தப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவு மானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்படும்.

10. a) Water usage Meter shall be supplied by the owner or occupier of the premises subject to the approval of Municipal Commissioner. The meter will be fined and shall always be under the lock and key system by the Municipal staff. The usage of said meters will be read by the Municipal staff every month and recorded.

(ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வசூலிக்கப்படும்.

10. b) Meters shall be supplied by the owner or the occupier of the building and maintenance charge of Rs.5/- per month will be leived.

(இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் உரிமையாளர் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்தரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்மந்தப்பட்ட பொறுப்பு பொறியாளரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின்னரே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் எவ்வித முன்னறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

10. c) If the meters fixed by the owner of the house or the tenant becomes defective then such owner or tenant will arrange for the repair of the meters at his own cost, after getting permission. The repair work shall be done within a period of two months under the Supervision of the Municipal Engineer after getting necessary permission from the Commissioner. The meter after repair should be handed over to the Engineer in charge. Such meters should be functional to the satisfaction of the incharge Engineer and only there after the meters should be fixed up again, Non-compliance will the above condition will entail disconnection of the water supply

(ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது துணை விதியில் வரையறுக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி குடிநீர் கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

10. d) During the repair time of water meter, water charges will be levied as per bye law No.16.

11. குடிநீர் இணைப்புக்கு வைப்பு தொகை கீழ்கண்டவாறு வசூல் செய்யப்படும்.

11. Security Deposit in advance towards payment of shall be collected in the manner as below person desiring to obtain water connections shall remit the deposit.

<u>நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் வைப்புத் தொகை</u>

| பயன்பாடு | வைப்புத்தொகை | | குடிநீர் கட்டணம் (மாதம் ஒன்றிக்கு | |
|---|---|---|---|---|
| | தற்போது உள்ள தொகை ரூ | மன்றத்தால் அனுமதித்துள்ள தொகை ரூ | தற்போது உள்ள தொகை ரூ | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்ட உள்ள தொகை ரூ |
| வீட்டு பயன்பாடு | 5000.00 | 5000.00 | 70.00 | 160.00 |
| வணிகம் | 10000.00 | 10000.00 | 160.00 | 400.00 |
| தொழிற்சாலை | 25000.00 | 25000.00 | 500.00 | 1000.00 |

**Proposed Deposit amount**

| Tariff | Deposit Amount | | Water Charges (for Month) | |
|---|---|---|---|---|
| | Existing Amount | Proposed Amount | Existing Amount | Revised Amount |
| Demostic | 5000.00 | 5000.00 | 70.00 | 160.00 |
| Non-Demostic | 10000.00 | 10000.00 | 160.00 | 400.00 |
| Industrial | 25000.00 | 25000.00 | 500.00 | 1000.00 |

ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத் தொகையை இருசம தவணைகளில் ஆறு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

12)உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டணம்

அ)குடிநீர் விட்டுப்பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம்(Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ.160/-

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கு அதன் பாகத்திற்கும் ரூ.15/-

ஆ)குடிநீர் வீட்டு பயன்பாடு இல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

12)Revised Charges for Provision of Drinking water Supply

i)Dringking water for Domestic use upto 10000 Litres Rs.160/-

Above 10000 litres for every 1000 liters

ii)Non-domestic use:upto 10000 litres Rs.400/-

பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்தபட்ட மாத கட்டணம் ரூ.400

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.40/-

Above 10000 liters for every 1000 liters Rs.40.00

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ.1000/-

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு லிட்டருக்கு அதன் பாகத்தற்கும் ரூ.50/-

iii)Industrial use upto 10000 liters Rs.1000/-

Above 10000 ;otres fpr every 1000 litres Rs.50/-

மொத்தமாக குடிநீர் விநியோகிக்காக (Bulk Supply of Water) கோரப்படும் இனங்களில் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

13 (அ) பரப்பளவு முறையிலான கட்டணத்தை, குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு திஙகளும் 10ம் தேதிக்குள் அனுப்பும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திஙகளில் உபயோகிக்கப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

13. a) The water charges shall be remitted in 15 days from the date of receipt of demand notice Demand for water charges will be made before 10th of every month and it is for the consumption for the previous month.

(ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணஙகள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் சகல இழப்புகளுக்கும், சேதஙகளுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளரே இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

13. b) If the water charges are not remitted within the time prescribed under the bye-law abovementioned, the Commissioner of the Municipality is empowered to disconnect the water supply at any time. The Corporation Commissioner will not be liable for any loss or damage on account of such disconnection of water supply, the tenant or the owner of the house alone is responsible.

(இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டஙகளின்படி குடிநீர் வழஙகுவதற்கு உரிய கட்டணம் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகள் பின்பற்றி வசூல் செய்யப்படும்.

13. c) Payment of all water charges supplied under the terms and conditions laid down in bye laws if not made by the party with in the time stipulated will be recoverable in the same manner pertaining with the norms as in property tax collection.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணமாக ரூ.500/—ம் மறுஇணைப்பு கட்டணம் ரூ.500/—ஆக மொத்தம் ரூ.1000/—ஐ வசூல் செய்யப்படும். இத்தொகை கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

13. d) For disconnected service connections under non payment of water charges then disconnection charges of Rs.500/- + reconnection charges of Rs.500/- Totally Rs.1000/- will be charged.

14. குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான குடிநீர் கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப் படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தபடாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் இந்த குடிநீர் இணைப்பை வீட்டு உரிமைதாரர் வேண்டுகோளின்படி தற்காலிகமாக துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்பு கட்டணமாக ரூ.500/–ம் மறு இணைப்புக் கட்டணமாக ரூ.500/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

குறிப்பு : இந்த துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள காலாண்டு என்பது மூன்று முழு நாளிட்ட திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

15. (அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் 30 நாட்களுக்குள் ரூ.100/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்துமூலம் நகராட்சிக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.

(ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின் தெரிய வந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

16. குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளின் ஆணையர் மிகப் பொருத்தமானது

14. No remission for non use of drinking water shall not be granted for a portion of quarter. Remission may be granted by the Executive Authority for non use of water for full quarter subject to previous intimation of such non use with request to close the water supply temporarily and subsequent demand for revision. The charges for such temporary disconnection shall be Rs.500/- and reconnection charges shall be Rs.500/- on each occasion.

**N.B. : The word 'quarter' in this bye-law means three full months or 90 days.**

15. A) Persons aggrieved regarding the meter readings and disputes against the meter reading 30 days of the reading which is disputed and shall be of faulty accompanied by a deposit of Rs.100/-. Estimate for aggrieved by any defect in the estimates shall be on writing.

15. B) Complaint not made within the above said period or not accompanied by the request deposit will not be entertained. No Compliant beyond such period and complaint not accompanied by such deposit will be entertained.

15. C) If during inspection it was found out that there is difference in the readings due to the defect in metere, The deposit amount will be refunded. If it was found out that metere was showing correcdt reading or the metere was not defective the deposit amount will be forfeited.

16. If the meter fitted to the house connection showed defective reading or the meter was found defective for more than a week then is such as case the meter reading recorded during the corresponding month of the previous year will be taken into consideration for assessing the charges of water connection for the period in question. If such particulars could not be

எனக் கருதும் புள்ளி விவரங்களின் அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17. வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றும் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. இதை மீறி பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

18. குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

19. ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டியது. பழுது ஏற்பட்டால் நகராட்சியின் உரிய அனுமதி பெற்று அவருடைய சொந்த செலவில் இப்பழுதினை செய்துக்கொள்ள வேண்டும்.

20. குடிநீர் குழாயின் நிலையை பரிசோதனை செய்யும்பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பினை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும்போதோ அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புகளோ பழுதுபட்டு இருந்தால் இதை பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கும் ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஆணையாளரால் ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும், இணைப்புகளை சரி செய்யப்படவில்லை என்று தெரியவருமேயானால் பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர்

ascertainable the Commissioner can determine the quantum of water on the basis of statistics gathered and considered fit and the charges will be assesed and collected, based on the above quantum. The decision of the Commissioner will be final.

17. No hand pump or power pump shall be fitted to the House Service Connection to draw water. If it is found fixed in the service connection then it will be disconnected without any notice to the party concemed.

18. No tap of any service connection shall be fixed or connected to a specified in the except cases by law sections 23 & 24. The water connection will not be linked with sump or storage tanks (this sections is not applicable for at 23 & 24).

19. Every person to whom a house service connection is or has been given by the Municipality shall maintain the house connection in good condition and to repair at his own cost Municiapality shall be maintained in good condition by the owner or occupier and repairs shall be done at their own cost.

20. The Executive Authority may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the conditions of (or) repairing of such fittings. If on such examination or otherwise it is found that the pipes or fittings are defective in any respect the Executive Authority may give notice to the owner or occupier of the premises to execute repairs with in a specified period or say one month at the most that the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the specified time allowed in the notice or if the defect is likely to cause waste or contamination then the Executive Authority may himself execute such work and recover the cost from the owner or occupier or alternatively the water supply

அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்பை துண்டிப்பு செய்துவிட்டு இணைப்பிற்கு நீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

connection will be disconnected.

21. வீட்டு பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக் குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்ப பயன்களுக்கான குடிநீரை அவையல்லாத பிறவற்றிற்கு பயன்படுத்துவதாக ஆணையர் அறிய வந்தாலும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும் அவர்தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப பயன்களுக்கு அல்லாத விதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னுடைய ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் செலுத்த தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் உத்தரவிடலாம்.

21. The water supplied from the tap connection for domestic use should not be used for any other purpose without the written prior permission of the Commissioner. If such use by the owner of the house or the tanent comes to the knowledge of the Commissioner or the Commissioner has reason to believe in the existence of such use he can ask the person concerned to pay the charges under bye-laws No.12 for use of water other than domestic purpose as per the particulars gathered by him from a particular date, and if the owner of the house or tenant fails to pay the said charges, the Commissioner can order for the disconnection of the water supply.

22. அ) நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாய் அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கக்கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் யாதும் திருப்பி தரப்படமாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்ற உத்தரவாதத்துடன் ரூ.5000/– அபராத்தொகை பெற்றுக் கொண்ட பின்பு தான் இணைப்பு வழங்கப்படும்.

ஆ) இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின்கருவிகளை வைத்து குடிநீர் ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

இ) குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு

22.

a) Taking water by means of a mechanical device through a pipe or through any electrical motor from the mains is prohibited. If such a device is found out the house connection will not only be disconnected but also the electrical motor or other mechanical device will be confiscated and such articles will not be returned on any account. Reconnection will be given only on payment of Rs.5000/- as fine, along with an undertaking that such devices will not be fitted in future.

b) Repetition of use of such mechanical or electrical device, for pumping out water will entail permanent disconnection of the water supply connection. Action will also be taken in a Court of law.

c) All applications for a water supply House Service Connection for providing rain water harvest arrangements. Under ground drainage application should be submitted along

அமைத்திருப்பதுடன், வெளி செல்லும் கழிவுநீரை வெளியேற்ற புதை வடிகாலுக்கான விண்ணப்பத்தை விண்ணப்பித்து நகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதை வடிகால் இணைப்பும் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் பகுதியில் இத்திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரை தனியாக தொட்டி (cess pool) அமைக்க வேண்டும்.

with deposit amount and other charges for getting UGS Connection along with water supply HSC. If the scheme is not force in such locality a separate arrangement is to be made for drainage disposal (cess pool).

23. பொதுக் கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம், ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக் கொடுக்கப்பட வேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியை அமைத்து அதற்குத் தேவையான உபகரணங்களுடன் பொருத்தி நகராட்சி பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்பட வேண்டும்.

23.Public latrine / urinal or water closet which is supplied with water from the protected water supply system shall be situated in such manner and such locations as directed by the Municipal Engineer.

24. கொதிகலன்களுக்கு நகராட்சியின் பகிர்மான குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்காக தனியாக தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

24. Steam boiler which requires water from a Municipal pipe supply shall be supplied from a cistern and not directly from a service pipe and every such cistern shall be supplied with a ball valve, a detective or warning pipe and proper means by access for inspection thereof.

25. தீ விபத்து நேரிடும் சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் நகராட்சியின் ஆணையர் பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாமல் பிரதானக் குழாய் அல்லது பகிர்மானக் குழாய்கள், திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் அவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

25. Except in case of fire, no person not duly authorized by the Municipal Commissioner or the Municipal Engineer in that behalf shall open or in any way interfere with any main or pipe or fire plug with municipal water supply shall step the flow off or interfere with the flow of the water main or distribution lines or cistern or fire hydrants of the Municipal water supply system.

26. ஆணையர் அவர்கள் உத்தரவின்பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிகளில் ரூ.3,000/– பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.2,000/–ம் மனுதாரர் செலுத்த வேண்டும். அதை

26. Under orders from the municipal Commissioner temporary water connection can be given to the buildings for marriage and other functions. For such extensions of water supply a sum of Rs.3,000/- per day or a portion of a day will be collected. In addition to that Rs.2,000/-

திரும்பத் துண்டிக்கும்போது ரூ.500/-ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15 எம்.எம் அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 3 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும் கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், செலவிலும் தருவித்து செய்துகொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100/- வீதம் வசூல் செய்யப்படும் மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

will be collected for connection from the main pipe line. Another Rs.500/- will be collected for disconnection of the supply. Such an extension will have a 15 mm main pipe of two meters length. Such water connection will be temporary and for these temporary extensions the applicant should provide the necessary materials and other implements at their own cost. If additional pipes are required a sum of Rs.100/- for a day or part thereof for every additional pipe fitting will collected. Such temporary connection shall not exceed 5 days at on each occasion.

27.(அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியில் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியில் பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அதன்மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவை பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ யாதொருவரும் முற்படக்கூடாது.

27.(A). No person shall draw / break the seal or the lock in the meter or break the glass on the dial or open the metere or change the recording device of the meter or do any act that may inteferes with the proper functioning of the meter.

(ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

27. B) No person shall draw water before the meter fixed for measuring has been read and the inintial reading registered.

(இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தடுக்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையே அனுமதிக்கப்படமாட்டாது அல்லது அதற்கு காரணமாக இருத்தல் கூடாது.

27.C) No person shall allow the theft of the water meter or cause the same to be damaged in such manner as to result in its improper functioning.

28. (அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் இவை பொருந்தும் எனவும் துணை விதிகளின்படி மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள் பொருந்தும். அவ்வாறு உள்ள வீட்டு இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் வீட்டு இணைப்புகள் அதிகாரபூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும்

28. A). All house service connections granted before these bye-laws come into force shall be recongnised as valid as through they had been granted under these bye-laws and shall be recognized as authorized connection under the perview of these bye-law, if the owner or occupier remits the rates applicable under these by-laws

அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகள் நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாய் கருதப்பட்டு வீட்டு உபயோக இணைப்புகளுக்கு அபராத தொகையாக நாளொன்றுக்கு ரூ.3000/–குடியிருப்பு இல்லாத வணிகம் மற்றும் தொழிற்சாலை இணைப்புக்கு நாளொன்றுக்கு ரூ.6,000/– வீதம் வசூல் செய்யப்படும். தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

If the said charges is not paid these connections will be treated as for non domestic illegal connections and fine will be imposed @ Rs. 3000/- For domestic: @ Rs, 6,000/- for non domestic. These connections are liable to be disconnected with fine. In continuous offence, the House Service Connection will be disconnected permanently.

(ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

28. B) The by-law already in force are repeated with effect from the date on which new bye-laws come into force

(இ) புதிதாக குடிநீர் இணைப்பு பெற விரும்புகிறவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதியாண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

28. C) The owner or occupier of the building for applying new House Service Connection shall be along with the receipt of all tax and on tax up to date after remittance of taxes and these cases only be considered.

29. குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் வீட்டு உபயோக பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்காகவோ வழங்கப்படும் குடிநீர் தவறுதலாக பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகிறது என்று நகர்மன்றத்திற்கு தெரியவந்தலோ 24 மணி நேர அவகாச எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து இணைப்பை துண்டிக்கும் உரிமை நகராட்சி மன்றத்துக்கு உண்டு. இத்தைய சமயங்களில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நஷ்டத்திற்கும் நகராட்சி மன்றமோ அல்லது ஆணையரோ பொறுப்பு அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

29. If there is scarcity of supply of water or if the drinking water supplied for a certain type or under other purpose or if it is found that the water connection are wantedly damaged, the said water connection will be disconnected after giving a notice of 24 hours and the Municipal Council is empowered for this disconnection. Neither the Commissioner nor Municipal Council shall be held responsible for any loss on such account.

30. ஒவ்வொரு இணைப்பின் தகுதியைபொட்டி தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

30. These bye-laws shall be applicable to such institutions, owned, controlled and managed by government as may be decided by the Chief Engineer, Commissioner of Municipal Administration office, Chennai.

31. துணை விதி 22 தவிர மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர். ரூ.5,000/– வரை அபராதமாக

31. Whoever commits a breach of any of the above bye-laws shall be punishable. Contravening any of the bye-laws shall be liable to penalties as under.

தொடர்ந்து செய்யப்படும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால், தொடர் அபராதமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/– விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்

Contravention of bye-law other than bye-law no.22, a person is liable for fine of Rs 5,000/-(Rupees Five thousand Only) if the violation continues on receipt of intimation a sum of Rs.500/- (Rupees Five hundred Only) will be levied and water connection will be disconnected and thereafter will be disconnected thereafter and criminal action will also initiated through the court.

32. குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை (படிவம்/அ) ரூ.100/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்,

32. For applying House Service Connection the house owner or occupier should get the form 'A' after remitting a sum of Rs. 100/-. into Municipal Treasury.

__தண்டனை__

இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும் மேலும் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும், அவர் தண்டனைக்கு உரியவர் என கருதப்படுவார். அவருக்கு ரூ. 5000/– வரையிலும் அபராதம் வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணை விதிகளை தொடர்ந்து மீறப்படுமானால் நாளொன்றுக்கு ரூ. 500/– தொடர் அபராதமாக விதிக்கப்படும்.

__Penalty__

Any person contravening any of these bye-law or a person in control of a minor child of lesss than 7 years of age failing to prevent such child from contravening any of the above bye-law is liable for penalty by way of fine of up to Rs. 5,000/- (Rupees five thousand only). For continuing violation after the first instance a sum of Rs. 500/- (Rupees Five hundred Only) shall be levied for each day thereafter.

நகராட்சி ஆணையாளர்

// உண்மை நகல் //

## 2. பொது குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்.

1. எவரும் பொதுக் குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ, வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படி கூடாது.

2.(அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங் களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

(ஆ) குடும்பப் பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்கு பொது குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.

(இ) பொது குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப் பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ, துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ, பிராணிகளை குளிப்பாட்டுவதோ கூடாது.

(ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொது குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒருமுறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

3. விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பிற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காக பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

4. தீ விபத்தின் போது தீயை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொதுக் குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக் கூடாது. இவ்வாறு தீயணைப்புக் காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொது குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாயில் இருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாக கருதப்படுவதுடன் நகராட்சிகளின் சட்ட விதிகளின்படியும் அவர்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள பிராணிகளை அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய்ப் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய பிராணிகளை பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

## 2. Public Fountains By laws

1. No person shall cause the safe flow or leakage of water from the public water tap or fire hydrant.

2. a) No person shall draw water from public fountain except in a vessel with a capacity of not more that thirty litres.

b) No person shall draw water from public fountain other than for domestic purposes.

c) No person shall take bath or wash clothes or water vehicles, animals etc at a public fountain.

d) When others are waiting no person shall draw water from a public fountain more than once.

3. No person shall draw water from fire hydrants for other purposes during the fire accident occurring.

4. No person shall continuously draw water from a public tap or fire hydrant or continuously operate the same. If a person draws water continuously from a public tap or fire hydrant for his own private purpose, he will be deemed to have violated this by-law and appropriate action will be taken against him as per the provision of the Tamil Nadu District Municipalities Act.

5. No person shall take any animal which is suffering from any contagions or infections diseases or mytiche which has been or which he know or reasons to know to have opposed to any infection from any or the alume discharge to or near any public fountain or called through.

6. அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள நபர்களை பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக்குழாய் இவற்றை பயன்படுத்தக் கூடாது.

6. No person affected with any obnoxious or contingencies or infectious disease shall use any public fountain or cattle tank or fire hydrants.

7. பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாய் ஆகியவற்றைச் சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

7. No person shall defecate or in any manner commit any mischief in and around a public fountain

8. தீ விபத்து நேரும்போது தவற மற்ற தருணங்களில் ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப் படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மான குழாயில் உள்ள தடுக்கிதழ்கள் தீயணைப்பு குழாய் அல்லது நகர்மன்றம் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக் குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

8. Other than during fire accidents, no person without the authority of the Municipal Commissioner shall open or cause water to be drawn from any public tap or cistern or fire hydrant or water distribution main or cause any or of the above to be damaged.

9. பொதுக் குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக உடைத்த குடங்கள், டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் வைக்கக் கூடாது. பொதுக் குடிநீர் குழாயில் குடங்களை கழுவி குடிநீரை வீணாக்கக் கூடாது.

9. No person shall have any reservation for draw water from the PF. Broken vessels and draw vessels should not be cleaned through public fountain water supply.

(ஒம்) எஸ்.அசோக்குமார்
ஆணையாளர்(பொ),
திருப்பத்தூர் நகராட்சி

// உண்மை நகல் உத்தரவின்படி //

நகராட்சி பொறியாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

20/01/17